978

உ

கணபதி துணை.

# திருவருணை உண்ணமுலையம்மை பிள்ளைத்தமிழ்.

17 DEC 19
MADRAS
978/4.19

இது
காஞ்சிபுரம்
சோணாசல பாரதியவர்கள்.
இயற்றியது.

காஞ்சிபுரம்
ஜவுளி, சைஸ்மில் ம-ா-ா-ஸ்ரீ
அ. கன்னியப்ப முதலியாரவர்களால்

காஞ்சிபுரம்
ஸ்ரீ பெருந்தேவி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

(முதற்பதிப்பு) 1919. காபி (750

0,15Mcm6,T
N19
179240

17 DEC 1919
MADRAS

உ

கணபதி துணை.

# திருவருணை
# உண்ணாமுலையம்மை பிள்ளைத்தமிழ்.

---

விநாயகக்கடவுள்.

பொன்பூத்தபுரிசடைப்பிறைதர்பாலூற்றையபோயேற்றையருள்கபாலம்
பூட்டிவன்கோட்டினன்றேட்டிருள்காட்டியெப்புவனமுஞ்சுற்றிமீட்டிங்
கின்பூத்தமெய்த்தொண்டர்கூட்டிளம்புற்றநதினிக்குமதர்க்கூட்டிடு நம்
மிருசரணநிழல்பிரிவெல்லைமழலையருந்தலொழியிவதனமகவையிலைவர
மின்பூத்தவைவஞ்சத்தருக்குமைஞ்சத்திரியிலெரியிசையைத்தொழிவிற்றிடுப்பின்
வியனுலைவிலோலாங்கபயின்றனித்தெண்ணக்கவிலையாடுமெருங்மநோக்கி
மன்பூத்தவருவம்மைகன்னியெனமறையோதும்வாய்மைபொய்யாதவண்ணை
வன்னியண்ணாமலைமணந்தவுண்ணாமுலைமடந்தைதண்டமிழ்தழையவே [ம்

(காப்புப்பருவம்.)

திருமால்.

பூமேவுபுவனமெப்புவனத்துமேலான புண்ணியப்புவனமென்றே
புலமதுதெரித்துமற்றுலகர்காண்வருமதும் பொல்லாதமலவிருள்கழீஇக்
காமேவுவண்மையேமெனநாதற்கேட்பிரான் கனஞானதீபவொளியிற்
கருணைமலையாயோங்குமருணையுண்ணாமுலைக் கவுரியையுவந்துகாக்க
மாமேவுபாற்கடலினவேறுராவிர மணிப்பணைப்பாயன்மன்னி
மயர்வறக்கண்வளர்ந்துயர்வறவுயர்ந்ததன் மார்வமாகதனைகரந்
தூமேவுதுளவத்தலங்கரித்தொளிர்கவுத் துவமணிச்சுடருமிட்டுச்
சுந்தரத்திருவைவைத்தன்பருக்கின்பருள் சொரிந்தவருமைக்கொண்டலே. (க)

சிவபெருமான்.

மறிநெடுங்கடல்மீதொரு பெரியமந்தரமாமலை
வளையுறும்படிவாசுகி வன்மையிற்பூட்டுரு
மதனநன்றுசெய்போதவல் விடமெழுந்திடவூனென
வார்களங்கொவோனவர் தம்மைமூற்கரத்துளார்

மறலிவந்திடுவானென வழுதுகொந்திடுதாயையு
மயர்வுகொண்டபிதாவையு முன்னுறத்தேற்றியே
மனநெகிழ்ந்தரவேரமெனு முறையுடன்சிவபூசைசெய்
மகவையங்கினிதாயருள் வண்மையிற்றேற்றினர்

வெறிகொள்பங்கயவேதனு முலகளந்திடுபாதனும்
விபுதர்தன்றுவிணுதனு மெண்ணுநற்சீர்த்தியார்
விதியறிந்தமூவாயிரர் புலிபதஞ்சலிமாதவர்
மிகவுளங்களிகூர்சபை நண்ணுமெய்க்கூத்தினர்
விபவவைங்கரவாரண மறுமுகம்பெறுகோளரி
விழைவயர்ந்திடகாலிரு பொன்மலைக்கேற்றினர்
விமலமங்களகோமள வனசகுஞ்சிதபாதமென்
விசிதநெஞ்சகவாதன மண்மவைத்தேத்துவா

மெறிதருக்கணபேரிகை யமுதளைந்தொளிர்வால்வளை
யியமடங்கலும்வார்கடல் பின்னுறத்தாக்கலா
லெழுமுழங்கொலிமாதிர முழுதுமண்டலினீதென
விசையுமென்றயராவல்கொள் விம்மலிற்கேட்டபே
ரிதயமன்புறுமாறுமுன் மனமுவந்தமெய்ஞ்ஞானிய
ரிலகுவண்டிருநாளென மன்னுமச்சாற்றைநகா
மிவணகன்றவணேகிகம்விழிகிறைறந்திடுசேவைசெய்
திடர்தணிந்திடலாமென நன்னயத்தாற்புகா

வறிவுடன்றிருமாநதி பெருகுதண்புனலாடிமெய்
யணியும்வெண்பொடியான்மல வெவ்வலிச்சேட்டைபோ
யகலவென்புமுளேநெகு பரவசங்கொடுதேகமு
மடையவொண்புளகார்தர மென்மெலப்பேர்த்தெழுவ
வடிவலஞ்செய்தணுமலை யொருபெரும்பொருளேயுன
தருள்வழங்கிடுவாயென வுன்னிநற்காட்சிகா
ணருணையம்பதிவாழ்தரு கருணைபொங்குமிமாசலை
யமலையெங்களுண்ணாமுலை யம்மையைக்காக்கவே. (உ)

## செங்கழுநீர் விநாயகர்.

பொதிகொண்டவேணிப் பிரானரியயன்போகி புகழ்கொண்டவைப்பினுளும்
புல்லுண்டுகயலுண்டுதண்டுண்டு தழையுண்டு போந்துண்டு தாங்குதுமெனுங்
கதிகொண்டவிடைகருடனெகினம் வெண்கரியுங் களித்துறவறிந்தாகுவுங்
கனமோதகாதியுண்டுற வாழ்வுர்ந்தசெங் கழுநீர்க்களிற்றைநினைவா

மதிகொண்டவந்தணர்கண்மைந்தர்களைநந்தண வனந்தனித் சந்தையாரா
வன்னிகாள்வருகவென் றருமறைபயிற்றவவண் வந்துகிளிகளும்விளவி
நிதிகொண்டகற்பகச் சோலைவன்னிகளுக்கு நீரும்பயிற்றியமர்வா
னீள்பொழில்குலாவருணை வாழ்தருமபீதகுச நிமலையைக்காக்கவென்றே
(௩)

## முருகக்கடவுள்.

துள்ளிமான்பற்பலவுலாக்காட்டு வேடர்வலை சூழ்த்துவன் பார்வைபுல்லின், சூழ்ச்சியாம்பிறிதின் கிழமைபூண்டு சிறுமான் றொடர்ந்துகொலை செயநீங்கெனு, வள்ளியான்வலை வாரொடும்போக்கிகன்பார்வை வைத்துப் புல்லென்று தனையே, மன்னுதற்கிழமையாக் கொடுநிற்கவிளையாட வருமோர்பெருமானை நினைவாம், தெள்ளிமானதபூசை யிடைவிடாதாற்றுமுயர் சிவஞானயோகர்தம்பாற், சேர்ந்துமயர்வுங்கொடுமையுந்தீரவெண்ணினேங் தேகநமதாக்குதுமெனப், புள்ளிமானும்புலியு முறவாடியுரியபணி புரியருணகிரியெமானைப், புணருந்தாமுலைப்பெயர்கொள் பெண்மானைப் புரிந்தினிதுகாக்கவென்றே (௪)

## பிரமதேவர்.

வேம்பசியினெளியர்கண் முறையிட்டடைந்துநல் விருந்துண்டவள்ளன்மனையின், வேதியிடமெங்கணும் வீங்குவயிறுருதூங்கி வேடைதவிர் செய்கைமானத், தேம்பசியகறையுண்டுபொட்டளிமயங்கிச் செழுந்தோட்டிடங்கடோறுந், திகணீலமணிகளிற் கண்வளருமலரணைத் திசைமுகத்தேவை நினைவாஞ், சாம்பசிவ ராமதுதி வேதகீதத்திறனுடு தமிழ்வேதவிசையுமாந்தித், தான்றனைமறந்து பரமானந்தவநுபவத் தன்மையினிருந்ததாலோ, பாம்பசியெயிற்றுவாய்ப் பயமின்றியெலியினம் பயில்வுவெனவறிஞரேத்தும், பண்புறுமணாமலையி னின்புறுமுணாமுலைப் பாவையைக்காக்கவென்றே (௫)

## இந்திரன்.

அத்திமேன்முளைத்துக்கமுகமா ரிருப்பை யலர்தருகற்பகாடவியி, னகத்தியமாரக்குங்குமக்கோங்க மசையவாடரம்பைமாதளைய, வைத்தவசோகமான்மகிழ்ந்து வயிரவேல்விளாமனுற்கோட்டு, வாகையம்பனைக்கை மாமிசையெட்டி வருமரசன்புடன் புரக்க, பொத்திருளுலகின்மன்னுயியிபோகம் புசித்திருவினையொப்பிற்பாகம், பொருந்திமெய்ச்சத்திப் பதிவினிற் பொன்னிற் புரிசடைப்பரன்கழலுறல்போற், கொத்திணர்க்கொன்றையடிநிழன்மன்னிக் கோக்களின்படைதருவளஞ்சூழ், குளிரருட்சோணமலை வளரபீத குச்சிவஞானவல்லியையே (௬)

## திருமகள்.

பணங்கொண்ட பாப்பணையின்மீமிசைக்கண்வளர் பரந்தாமனைப்பார்த்
துநம், பன்னியர்களிருவிரைத்தம்மினைவர்பானிக்க மற்றடையிலொன்ன
மாயன், மனங்கொண்டபூமாது நீகேட்பதென்னெனவ மன்னுணவிர் சொ
ன்னனென்றெண, மற்றுமாதுமிழ்த்துமாத்தேனை வேட்டென்றமெனை மகிழ்கொ
ளும் பொன்புரக்க, கணங்கொண்டமெய்த்தொண்டர்வந்தசங்கிதின்றுகங்
காதாரவென்னலும், கருவிழிபுரட்டித்த துதாசெம்மேனியைக் கருமேனி
யாக்கியடியார், குணங்கொண்டவருளுமாபதியுமா பதியெனக் குளிர்கையின்
வெண்மேனியாக், குலவச்செய்தருணைவளர்கருணை யுண்ணாமுலைக் கோமள
ப்பெண் மணியையே. (எ)

## கலைமகள்.

மதுமலரிரண்டினெம்மலர் சிறப்புடையதென வாணிவீணைவுற வயனு
மின், மாமியார்மலரென்ன நம்பீடமதனம்பு மாமடிகள் கண்ணுமேலாம்,
பொதுமலர்கெசலென்னுங்கடாவுக்கு விடையின்று பூசேரக்குநான்முகனை
நன், பொருளுரைக்கினெழுமுகனெனச்செய்து மருவுவென் பூவை யபி
ராமிகாக்க, விதுமலர் திருப்பாற்கடற்கே நிரர்க்கிர பிக்கொளித்தவளமாட
மேவுமட மங்கையரு மாடவருமன்பினொடு வீற்றிருந்தாதுவர்கள்வா, யதும
லருமுன்னமுதா கந்துதிருமாவென்ன வாட்டுபெறு வாழ்ச்சியோங்கு, மாதி
யருணைபுரி விநோதமுறவாழ்ந்து மயிதருசாமயிலையே (அ)

## துர்க்கை.

சுத்தலையமுந்தலைய கனினைக்கடலைசாய காரைகோக்கோட வாளை,
களிநீர்த்தடத்தலை வெழீஇப்போந்துதாக்கவுயர் காணிகோத்தலையினிற், கொ
த்தலைய வதிருமின நிலையத்தலைமந்தி கொண்டஞ்சுதலையுற்றதன், குட்டி
யையருத்திப்பி னுறுதலையாக்குமெழில்கூருணைவாணனுதலை, யித்தலையு
மெத்தலையு மெய்த்தலையவீரருட னீற்றலையினுற்றலையும்வந், தேற்றலைவி
லாதமர்செயாற்றலையநிந்தகா னெருமைக்கடாத் தலையினைக், கைத்தலை
யெடுத்தகூர் முத்தலைப்பின் விட்டியொலம் காத்தலைமிதித்து நின்றே, காட்
சிதந்தன்பருக் கருள்செய்துர்க்கைத்தலைவி காதலொடேனிகாக்கவே (௯)

## சத்தமாதர்.

பணார்மறைபிரமாகநற் கூர்த்தவேல் பரு உவணவலார்தொழப் பேற்றோர்
விணாசனி குலம்வைத் தோச்சுமோர் விநோதவெழுமாதரைப் பேரற்றுவா

மணாளனைவிடாதுளத் தேத்தியே மனோரமதா யிடப் பாற்கணே
யணாமலையுன்வாழ்திருக் காட்சியா னபீதகுசதேவியைக் காக்கவே (௧௦)

## முப்பத்து மூவர்.

திக்கோடிங்கிலவரைப்பும் வானகமுங்கமழச் செழும்பொழிலினளிகு டைய வெழும்பிரசமலரி, னிக்கோடிவளவயல்பாய்ந் தெவ்விளைவும் விளையு மிலகருணைநகருணை யிளங்கொடியென்னம்மைக், கெக்கோடியிசையுமி சை யுருத்திரராதித்த ரினியமருத்துவர்வசுக்க ளாகிய முப்பத்து, முக்கோ டியெனும் வகையிற் பதினொன்றொடொருவான் மூன்றிரண்டாநாலிரண்டா முதல்வர்கள்காவலரே (௧௧)

## (செங்கீரைப்பருவம்.)

அருளார்ந்தவுமையம்மை யெம்மையாட்கொள்ளவந் தவதரித்தாளென் றுமிக், கன்பினீராட்டிமந் திரநீறுசாத்திநுத லவிர்மணிச்சுட்டிநாற்றி, யிரு ளார்ந்தகுழியக் கொண்டைத்தலைப்பணி யிலங்கத்திருத்துபுசெவிக், கிரவி மதிநிகர்குதம்பைகள் பூட்டிமற்றையணி யிசைவுறவலங்கரித்துப், பொரு ளார்ந்தபதமுளரிகைக்காந்தளிற்கொண்டு புரிதவாயல்லியிற்றம், பொழிமு லைக்கோங்கமுத மூட்டிநோக்கித்தன் பொருப்பரையன் மனைவிமேனை தெருளார்ந்தமகிழ்வின்மடி வைத்து முத் தாடுமயில் செங்கீரையாடியருளே, திகழருணைநகர்மன்னி மகிழ்வினொடுவளர்கன்னி செங்கீரையாடியருளே. (௧)

பிறந்தவிம்மனிதப் பிறப்பரிதெனக்கண்டு பெருநூல்களோதும்வாய்மை பிழைபடாவண்ணநல்லறிவாளர்தேர்ந்தன்பு பெருகுபுருடார்த்தநான்கி, னறந் தவாதோங்கிடத்தலையெடுத்தேபொரு ளமைந்திடமலர்க்கையூன்றி, யானவின் பஞ்சேரவொருதாண்மடக்கிவீ டருளவொரு தாளைநீட்டிக், கறந்தபால்கன் னலொடு முக்கனிச்சாறளாய்க் கபிலையின்னெய்விராவிக், காட்டுவளர்கோ ட்டுநறை கூட்டிசுவைநீட்டுசெங் கனிவாயினூறலொழுகிச், சிறந்ததாய்மடிக ளைவிளையாடு மான்கன்று செங்கீரையாடியருளே, திகழருணைநகர்மன்னி மகிழ்வினொடுவளர்கன்னி செங்கீரையாடியருளே. (௨)

விந்தமலைபாதலம் விழுந்தமலைபொதியமலை மிதிகொண்மலைநூனிகைய டியான், வெள்ளிமலையமர்தலை கிள்ளிமலைநிருதன் வெடுக்கென்றெடுத்த மலைமாண், முந்தமலைகடையவிமிர்மந்தரமெனும்பெரிய மொத்துமலைமத்து மலைபொன், முடிவழுதியடியுண்ட மலைகாலினிடியுண்டு முடிமூன்றுபோ னமலைபின், னெந்தமலைநின்றிரு வுணாமுலைக்கொப்பாகு மிறைவாண்ணு

மலையதே, யென்றென் றுதுதிசெய்து வெண்கமலைசெங்கமலை யிந்திராணி யுமிரதியுஞ், சிந்தமலையாதுபணி யிமயமலையுமையமலை செங்கீரையாடியருளே, திகழருணைநகர்மன்னி மகிழ்வினொடுவளர்கன்னி செங்கீரையாடியருளே (௩)

உலகமுழுதும்பெற்ற கருணை மாதாவென் றுவந்துமறைமுறைசறையநீ, யுண்ணாமுலைப்பெயர் புனைந்தனையுயிர்ச்சிறு ருய்யும்வணமெவ்வணமெனு, விலகவிளமுரலொடுமெண்ணுமலைப்பிரா னின்பவுரையாடவடிக, ளெவ்வுயிர்க்கும்பிதா வன்றுகொன்னும்பெயரின் யாதுபயனென்ன நினைபிற், கலகவினைநீக்கியுயர்கதியருளுவோமெனக் காதலுடனெனையுநினையிற், கனஞானவமுதீந்துகாப்பலெனவெந்தையுங் களிகூரவிளையாடுநெற், நிலகவாணுதன்மைக்கண் வெண்ணகைப்பைங்கிள்ளை செங்கீரையாடியருளே, திகழருணைநகர்மன்னிமகிழ்வினொடுவளர்கன்னி செங்கீரையாடியருளே (௪)

சம்பாதிதேவர்திருமுகமேவுகண்களாஞ் சந்திராதித்தர்தம்மைத், தையனின்கரவினமுடவதிசயநோக்கு தன்மையினிராமினடைய, வெம்பாதிர்கண்பிருலகிரொனடுக்கணழல் வெளியெய்தியொளிசெய்திடவே, வெம்பவந்தீரும்வணம் வெள்ளிமலைநீங்கியிம் மேதினியடைந்துகச்சிக், கம்பாதிருக்கணருள்புரிகென் றபூசனை கருத்துடனியற்றியருளின், கவின்வாழையம்பந்தர்வைகிமறுநாளிவண் காதலினுருற்றுதவனுற், செம்பாதிகொண்டையர் மெய்யையகலாவையை செங்கீரையாடியருளே, திகழருணைநகர்மன்னி மகிழ்வினொடுவளர்கன்னி செங்கீரையாடியருளே (௫)

## வேறு.

மையிருளிரவியை வளைவுறன்மான மணிச்சூழியமாட
மதியமுகிசால வெனவமுதம்பொழி வண்முகமலராடத்
துய்யநுதற்றில கத்தெதிர்முத்துச் சுட்டியசைந்தாடத்
துள்ளுபுகட்கயல்பாய் செவியிற்பொற் றோடுமசைந்தாடச்
செய்யநலல்வியின்முல்லையரும்பிச் சிறுநகைநிலவாடத்
திகழ்திருமார்பிற்பன்மணியாரஞ் சேர்ந்துமிளிர்ந்தாட
வையகடாடவகண்டமுமாடிடவாடுகசெங்கீரை
யருணையுளங்குடிகொளுமொரிளங்கொடி யாடுகசெங்கீரை (௬)

காமணிசெம்மணிவளைவெயிலேனோக்கிக் கானக்குயில்கூவக்
கவினுறுமரகதமெய்ந்நிழலேனோக்கிக் காதன்மயிலாடச்
சுருதிசொல்வாயின் செங்கனிநோக்கிச் சுற்றுபுகிளிபேசச்
சுவையுறுமக்கனியூறலைநோக்கிச்சூழ்ந்தெழிலளிபாடத்

தரைமுதலியவுலகருள்வயினோக்கிச்சகமகன்மிகவாழ்த்தச்
சரணமணிந்தசிலம்பொலிவினவிச் சரணர்குழாம்போற்ற
வரவரசாடவகண்டமுமாடிடவாடுக செங்கீரை
யருணையுளங்குடிகொளுமொரிளங்கொடியாடுக செங்கீரை (௭)

பொருளேபுகழேமணியேபணியே பொலியும்பெருவாழ்வே
புயலேமயிலேகுயிலேயனமே புகலும்பூங்கிளியே
மருளேதுமிலாவடியார்பருகும் வடியாக்கடலமுதே
மலரேமதுவேமணமேயளியே வளியேபரவெளியே
தெருளேதிருமாமறையின்முடிவே தேடற்கருநிதியே
தெய்வத்தருவேதருமத்துருவே சித்திக்கொருமுதலே
யருளேயெமதாருயிரேமகிழ்வாயாடுக செங்கீரை
யருணையுளங்குடிகொளுமொரிளங்கொடி யாடுகசெங்கீரை (அ)

வேறு.

குவலயமுதலியபலவுலகமுநிறை கொங்காருங்கோதாய்
குலமுனிவரர்சுரர்நரர்முதலடியர்கள் கொண்டாடும்பாவாய்
கவனவெள்விடையவரருள்பொழிமழையது கண்டாடுந்தோகாய்
கரிமுகனறுமுகனெனுமிருமகவு கனிந்தார்வங்கூர்வாய்
தவமெனவெளியர்செய்தனமுனதரிசனை தந்தாய்வந்தேநீ
தருதுணையுனையலதொருவருமிலையொரு சந்தானம்போல்வாய்
சிவபுரமெனவொளிரருணையுளுறையுமை செங்கோசெங்கீரை
திகழ்பரைதிரிபுரைபணிவரைதருசுதை செங்கோசெங்கீரை (௯)

வேறு.

தினையாமளவேநினைசீர்கண்டேயின்போடுஞ்
சிவையேபரையே யுமையேயென்பார்நெஞ்சூநின்
தனையேயோராணருடனே வந்தேபண்பாடுந்
தவமாமுனிவோரடியாருந்தாமுங்கூடும்
புனைநீளிமயாசலமாமென்றே கொண்டாடும்
புரிவாயுறைவாயரியோடயனாருந்தேடும்
அனையேயனபூரணியே செங்கோ செங்கீரை
யருணாபுரநாயகியே செங்கோ செங்கீரை (௧௦)

(தாலப்பருவம்.)

அழைக்குமுன்வந்தருளமல னனலின்வடிவினவிர்முடியை
யறிவலெனவெம்முருவமெடுத் தரிதிற்றொடர்ந்துமறியாது
பிழைக்குமலரோன்பெரும்பொய்யும் பிதற்றிப்பழியும்பூண்டதனாற்
பிடித்ததெனமையும் பழியதனைப்பெரிதுங்களைதல்வேண்டுமென
விழைக்குந்தவஞ்செய்தழற்காட்டிவிருத்தல்போற்செந்தாமரைக்காட்
டிணைக்குழாங்களமர்ந்துமகி ழினியகாட்சிவயின்வயினே
தழைக்குந்தீர்த்தவளவருணைத்தனமேதாலோதாலேலோ
தருமம்வளர்க்குமபீதகுசத் தாயே தாலோதாலேலோ (௧)

சென்னிக்குமவர்க்குக்கதியளிக்குந் திருவாரூருஞ்சென் றுநின்று
தெரிசித்தவர்க்குச்சித்திதருந் தில்லைப்பதியும்வசித்துமனை
முனைக்குமகிழ்வினிறந்தவர்க்கு மோக்கங்கொடுக்குங்காசியுமுண்
முதிருமன்பினெவ்வொர்வகை முத்திநல்கும்பிறதலமு
மெனக்குநிகரோவெவரேனு மெங்கேயிருந்துநினைத்தளவி
லீவன்வீடொன்றிதுவென்றிலகுஞ்ஞானச்சுடர்காட்டித்
தனக்குத்தானேர்வளரருணைத்தனமே தாலோதாலேலோ
தருமம்வளர்க்குமபீதகுசத் தாயே தாலேதாலேலோ (௨)

கூற்றையுதைத்தபெருமானைக் குன்றக்கோமான்றருமானைக்
குடியாயிருக்கமுடியாரக் கொண்டோனேர்குலவுபெரும்
பேற்றையுடையேன்றனையாக்கன் பெயர்த்தானெடுத்தானுதவினென்
பெருமைகுறைந்ததெனவடபாற் பிறங்குங்கயிலைமலைவெள்ளி
யேற்றைப்போலவுருக்கொய்வேனென் றிங்குற்றதெனவெள்ளை
யேறூர்ந்தன்பர்தொழவுமையோ டசர்காட்சிதரும்வீதிச்
சாற்றைச்சோற்றைவழங்கருணைத் தனமே தாலோதாலேலோ
தருமம்வளர்க்குமபீதகுசத் தாயே தாலோதாலேலோ (௩)

மலர்க்காற்சிலம்புஞ்செம்பகமு மருங்கிற்சேலையுறும்வனப்பும்
வளமார்களபமணிமுலையும்வரையம்புயமும்வளைக்கரமு
நலத்தானனத்தாம்பன்னகையு நளினக்கண்ணுஞ்செவித்தோடு
நறையுண்கூந்தன்மாப்பொலிவு நண்ணுந்திருமாநதிபாயும்
புலத்தார்நாடுபொன்னாடாம் பொன்னாடென்றுநற்காட்டைப்
புகழ்தன்முகமனெனவிமையோர் புகன்றுபல்காலேனுக்குபுகைத்
தலத்தாமரைகூப்பெழிலருணைத் தனமே தாலோதாலேலோ
தருமம்வளர்க்குமபீதகுசத் தாயே தாலோதாலேலோ (௪)

அவத்தைப்பேணிப்பற்பலகா லலைந்துகலிந்ததமையாதே
யரியவுயிரைக்கொன் றருந்தி யறிவிற்பெரியோர்தமைவைது
பவத்தைப்பேணிச்செயுங்கொடிய பஞ்சமாபாதகரேனும்
பரிவின்றொருநாள்வழிச்செலவிற் பார்த்தாரேனும்பவநீக்கிச்
சிவத்தைப்பேணிச்சித்திபெறச் சென்மமேதுக்கெனத்தெளிந்து
சித்தமுருகிப்போன்பிற்றிளைத்துப் புலனைவளைத்தினிய
தவத்தைப்பேணச்செயுமருணைத் தனமேதாலோதாலேலோ
தருமம்வளர்க்குமபிதகுசத் தாயேதாலோதாலேலோ (௫)

வேறு.

அண்டசராசரவுலகமடங்கலு மன்பொடுபூத்தவளே
யத்தனையுயிருமௌத்தனைமுறையு மருவகைகாத்தவளே
விண்டசனுதியர்வேண்டும்வரம்பெறவிழிகொடுபார்த்தவளே
மெய்யடியார்புரிதொண்டையுவந்தவர் வெவ்வினைதீர்த்தவளே
யெண்டசமூன்றினொடாறுமகன்றவ ரேத்துறமூத்தவளே
யாங்கள்செய்மாதவமேயொருவடிவா யிங்ஙனம்வாய்த்தவளே
தண்டசரோருகசகிமாத்தவளே தாலோதாலேலோ
தக்கணகயிலாயத்துறைமயிலே தாலோதாலேலோ (௬)

அருமறைமுதலியமாகலைமேகலை யாகவுடுத்தவளே
யருளிறைகொளுமுருவெதுவதுதகுமுரு வாரவெடுத்தவளே
மருவுமவிறையடிவழிபடுநிலையவர் மார்புவடுத்தவளே
மலர்கொடுதுதிபுரியடியவர்வினைகெட வாழ்வுகொடுத்தவளே
வருதமிழ்மலர்கொடுமாலைதொடுத்தவர் வறுமைகெடுத்தவளே
மற்றவருற்றிடமணிநூபுரவொலிமலியவிடுத்தவளே
தருமமெனுன்குநிரம்பவளர்த்தவ டாலோதாலேலோ
தக்கணகயிலாயத்துறைமயிலே தாலோதாலேலோ (௭)

வேறு.

கடனிறையொலிபுனல்கவர்தருமெழிலுறுகாரேசேர்மான்மார்பூடே
கடிகமழ்நிழல்விரிதுளவநல்வனம்வளர் காணர்தேனேவார்பூமான்
மிடைவுறுபலவுலகமுமுறைமையின்விதி வேதாநாவேசேர்பாமான்
மிளிர்சகசிரவிழியமரர்களதிபதி மேன்மேன்மாலாவீழ்வான்மான்
தொடுமலர்வளைகழைகொடுசமர்புரிதரு தோலாவேடோடோய்சீர்மான்
சுரமகளிர்கடவமகளிர்கடுதிசெய்துதோகாய்காவாய்காவாய்சே
வடியிடுபணிபுரிகுதுமெனவவர்தமை யாள்வாய்தாலோதாலேலோ
யருமறைபுகழிறையுடனருணையுளுறை யாயாதாலோதாலேலோ (௮)

வேறு.

கந்தனையத்திமுகன்றனைமுற்பெறு காவேபூவேகேழ்
கஞ்சமலர்ப்பதவன்பர்தமக்கெதிர் கானேதேனேநூன்
மந்தணமுய்த்துணருந்தவருக்குயர் வானேயேழ்பார்
மன்பதைபெற்றுமருந்தவினைற்றன மானேசீரேயாய்
வந்தனையிற்றொழுகன்றறிகிற்றிலம் வாணுணீணுணாய்
வண்டமிழ்செப்பிகிரந்தமின்புறும் வாழ்வேநீயீவாய்
சந்தவிசைத்தமிழ்பொங்கருணைக்கொரு தாயேதாலேலோ
சங்கரபத்தினிமங்களவுத்தமி தாலோதாலேலோ (௯)

அத்தனணைத்திடமுத்தமுகப்பவ டாலோதாலேலோ
வற்புதமக்களையற்பினவளர்ப்பவ டாலோதாலேலோ
பத்தரினத்தவள்பட்சமிகுத்தவ டாலோதாலேலோ
பக்கல்வசிப்பவடுக்கமறுப்ப டாலோதாலேலோ
சித்தசயப்பவண்முற்றருள்வைப்பவ டாலோதாலேலோ
சித்தியளிப்பவண்முத்திகொடுப்பவ டாலோதாலேலோ
கத்தருளக்கமலத்திலிருப்பவ டாலோதாலேலோ
கற்றவர்மெச்சருணைப்பதியுற்றவ டாலோதாலேலோ (௧௦)

(சப்பாணிப்பருவம்)

ஓமரையனணபாஞானவுருவானவ னுவந்தொர்மருகாகிநம்பா
லுற்றதுலகிற்றமதுநற்கருணைமற்றவர்க ளுய்த்துணரவைத்ததென்றே
யாமரைக்கணமுமகலாதபேரன்பினு லார்ந்தமனைமேனையுடனே
யழகானவிமயகிரியூடுபூம்பந்தரிடை யரியாதியமரர்வாழ்த்தக்
கோமரைநிகர்த்தவிழிநின்றந்தைதிருமணங் கூர்ந்துபுரிவித்தஞான்று
குளிருநன்னீர்பெய்துதத்தஞ்செய்திடமகிழ்வு கொண்டேற்றசிவபிரான்கை
தாமரையின்மீதுசெங்காந்தள்பூத்தனகையாற் சப்பாணிகொட்டியருளே (த்
தற்பேணுநர்க்கருள்செய்நற்சோணவெற்பிலுமை சப்பாணிகொட்டியருளே
(௧)

விண்முகத்தமரேசன்வெள்ளிவேதண்டத்தின் விமலர்திருமுன்னர்வீழ்ந்து
வெஞ்சூரனரிமுகன்றாரகன்முதலோர்கள் விண்ணகரையழல்கொளுவியே
புண்முகத்தெரியெண்ணவெங்களைச்செய்கொடுமை போக்கவொருமகவீகென
புரதகனனுபொறியளித்தனலனனிலனுற்பொங்குகங்கையினுய்த்திடத்(ப்
தண்முகக்கங்கையுஞ்சரவணையின்விடவாறு தனையராய்க்கார்த்திகையினர்
தனவமுதமுண்டமரும்வேலையப்பாணுணை தாங்கித்தழீஇக்கொளுமொர்சே
சண்முகற்கின்பால்வனத்தூட்டுசெங்கையாற் சப்பாணிகொட்டியருளே (ய்ச்
தற்பேணுநர்க்கருள்செய்நற்சோணவெற்பிலுமை சப்பாணிகொட்டியருளே
(௨)

இண்டையணிசெஞ்சடிலரெங்கைதமுக்கணர்முறையி னியானுமுக்கண
ணறுமுகா, வென்னைநீவெல்லவையோவெனவிகடகணபதி யியம்பவெள்ளறு
முகமொடே, பண்டைமுகராறுமுகராயெற்பயந்ததாற் பதினெண்கண்ணு
ளனியானெனப், பகர்கிலேனுந்தையார்க்காசிரியன்யானோர்ந்து பார்த்தியெ
ன விளையான் சொல, வுண்டைமாங்கனிகொலாமுலகெலாஞ்சுற்றியென் றுலா
செயங்குசமகளைய, முன்பெருவயிற்றினுக்கஞ்சிவிட்டேனிதனை யுணர்கவெ
னும்வேன்மகனையுஞ், சண்டைவிளையாதபடியன்பினணைசெங்கையாற் சப்பா
ணி கொட்டியருளே, தற்பேணு நர்க்கருள்செய் நற்சோண வெற்பிலுமை
சப்பாணிகொட்டியருளே. (௩)

என்னமுதனுதனருளெட்டுழக்கிருநாழி யெனுமளவைநெற்பெருக்கி,
யெண்ணான்கறங்களும்வளர்க்குமேகாம்பரை யிமாசலன்பெற்றசெல்வப், பெ
ண்ணமுதமெங்கள்குலதெய்வமெய்ஞ்ஞானமாம் பெருமாட்டியொருகோட்டி
பப், பிள்ளையைச்சண்முகப்பிள்ளையைப்பிறவும் பெறுதபெறுகருணைமாதா,
வுண்ணமுதமீகவெனவாதுலர்களோதுமுன மோதகையுடன்வானமுதினு,
மோங்குநால்வகையுண்டியறுசுவைவளத்தினிலுணீருணீரென்றுநாளுந், தண்
ணமுதமூட்டிடுஞ்செய்யபூங்கைகளாற் சப்பாணிகொட்டியருளே, தற்பேணு
நர்க்கருள்செய் நற்சோணவெற்பிலுமை சப்பாணிகொட்டியருளே (௪)

நீண்டவச்சிரபாணிகுண்டிகைப்பாணியொடு நீனிறச்சார்ங்கபாணி
நிகழுமுப்பத்துமுக்கோடிதேவர்கள்வரர்க ளின்பாணிகூப்பியேத்த
வீண்டவந்திடுதோற்றமதுதுடிப்பாணியி னியைந்தநிலைதோய்பாணியி
னிறனற்பாணிபின்மறைப்பூண்டடியினரு ளெடுத்ததிருவடியிற்கொடே
பூண்டஉப்புலிபதஞ்சலியடியர்கட்பாணிபொழியவானந்தவடிவிற்
பொன்னனைசிற்பரவியோமத்துநாதனுர்புரிகடங்கண்டடிகளுந்
தாண்டவஞ்சரிசரியெனப்பாணிகொட்டல்போற் சப்பாணிகொட்டியருளே
தற்பேணுநர்க்கருளசெய்நற்சோணவெற்பிலுமை சப்பாணிகொட்டியருளே
(௫)

வேறு.

சுட்டியசைந்திடவேர்வைமுகத்திற் சொட்டக்கண்முத்தஞ்
சொரியப்பரிவிற்றூணிபுரத்தொளிர் தூபிமைநோக்குபுநின்
றெட்டிகையோலத்தம்மேயப்பா வென்றழுமகவுபசிக்
கின்னருள்செய்கெனவெந்தையியம்பிட வெம்மனைநீசென்றே
வட்டிலினுண்ணாமுலைபொழியமுதொடு வளர்ஞானமுமூட்டி
வளர்த்தனையெங்கட்கென்னவடியீர்மாழ்கலிர்வம்மினெனுக்
கொட்டிமலர்க்கையழைப்பதுமானக் கொட்டுகசப்பாணி
கொற்றவர்மெச்சருணைப்பதிவித்தகி கொட்டுகசப்பாணி (௬)

ஆறுந்திங்களுநாறுங்கொன்றையு மணியெம்பெருமானுக்
காலும்பத்திமென்மேலுங்கொண்டுமெய் யதிலேவடிவாகி
நீறுங்கண்டியும்வீறும்மந்திர நிகரக்காமைந்தி
னினைவிற்பூசியும்வனையுந்தொண்டர்க ணிகழிச்சன்மத்தே
யேறும்வல்வினையாருந்தொல்வினை யியலத்தவ்வினையு
மின்றுயொன்றுதொன்றியுமொன்று மின்பம்பெறுவரெனக்
கூறுந்தன்மையிதாமெனல்போலக் கொட்டுக சப்பாணி
கொற்றவர்மெச்சருணைப்பதிவித்தகி கொட்டுகசப்பாணி (௭)

வாகனவாகனவானவன்மான்முதல் வர்க்கருமைக்காணா
மாணிடரோவறிவாரறியார்பிற மற்றுணரப்படுமோ
சேகனதாமனவாதனைதீர் சிவசித்திரலத்தாலே
சீர்கதிர்ரருள்வீரடியாமிரு செக்கமலத்தாலே
காகணநாயகரேயெனவோதுபுகட்கமலத்தாலே
காண்மகிழ்வாயதையேவருடாவரு கைக்கமலத்தாலே
கோகனகாசனமாமகணேயகி கொட்டுகசப்பாணி
கோமளைசாமளைசோணையுண்ணுமுலை கொட்டுகசப்பாணி (௮)

வேறு.

ஆடகமால்வரைருழுமரிக்கொடியைப்போலே
யாதியுமீறுமிலாதவரைப்புணர்கற்போயே
நீடகவாமுலைதாவெனமிக்கமருற்றேசேர்
நேயமகாரிருவோரையுமுத்தமளிப்போயே
யேடகமாமலரானனம்வைத்தொளிர்கட்பாலே
யேழைகளாயடிவேலைசெய்பத்தருளத்தேவாழ்
நாடகமாமயில்போல்பவள்கொட்டுகசப்பாணி
ஞானவுண்ணுமுலைநாயகிகொட்டுகசப்பாணி (௯)

தாரணிவானகம்யாவுமணக்குமலர்க்கோதாய்
தாவில்சராசரம்யாவும்வளர்க்குமெழிற்றாயே
சீரணியாகமவேதமுரைக்குமணிப்பூவாய்
சிவர்களோகைகொள்வாழ்வுகொடுக்குநடத்தோகாய்
பூரணிபூதரராசனளித்திடுநற்பாவாய்
பூசனையீசனையேபுரிபொற்புறுகைப்போதால்
நாரணியாரணிகாரணிகொட்டுகசப்பாணி
ஞானவுண்ணுமுலைநாயகிகொட்டுகசப்பாணி (௧௦)

(முத்தப்பருவம்)

மைத்தவிணதுகுழற்குடைகார் மலர்மாமுகத்துக்குடைமதிய
மதுராவாக்குக்குடைகரும்பு வன்னக்கழுத்துக்குடைகமுக
மொத்ததனத்துக்குடைகரிக்கோ டொப்பிலல்குற்குடையரவ
மொளிர்கவானுக்குடைகதலி யுபயசரணுக்குடைசமலம்
வைத்தமுத்தநகைக்குடைந்து வருந்தல்கண்டொண்டோட்குடைவேய்
மன்னுந்தவஞ்செய்திடவதன்பால் வந்துகருணைபுரிந்ததென
முத்தர்பரவுமுக்கண்முத்த முகந்தமுத்தந்தருகவே
முத்தியளிக்குமருணையுண்ணா முலையாய்முத்தந்தருகவே. க)

பத்துத்திசையுமணத்தூது பரப்பிப்பயிற்றிசெக்குருவிப்
பாடிப்பரவும்பத்துடைய பமரக்குழுக்கள்விருந்தயரச்
சத்துச்சித்தானந்தநறை தாவாதொழுக்கிப்பவப்பசியைத்
தடிந்துபரமசுகத்திருத்துந் தருமத்தருவத்தண்மலரே
மத்துக்கொடியசூர்பாவை மடித்துத்தேவர்க்கமுதளித்த
வடிவேலெடுத்துமயிலேறி வாழ்த்துவோர்முனோடிவரு
முத்துக்குழக்கைதமுத்தமிழே முத்தேமுத்தந்தருகவே.
முத்தியளிக்குமருணையுண்ணா முலையாய்முத்தந்தருகவே. (உ)

மணக்குங்கமலந்தண்மதிய மைத்தமேகம்வளர்பூக
மதுரக்கன்னல்சுவைச்செந்நெல் வளத்தவாழையுயர்வேழம்
வணக்குஞ்சரக்கோடெழிற்கோடு மண்கீள்கேழலின்கோடு
வளையுங்கொக்குவல்லுடும்பு மாநீர்முதலைவிளைசிப்பி
பணக்குண்டலியூர்ந்துபொழி பாலான்பன்மாமாதர்கள்கழுத்து
பாய்மீனெனுமிப்பதிற்றிரட்டிற் படுமுத்தென்றுபகர்கவிஞர்
கணக்கும்வழக்குங்கடந்தொளிர்நின் கனிவாய்முத்தந்தருகவே
கருணையருணைக்காமாட்சி கனிவாய்முத்தந்தருகவே. (௩)

நிறைந்தஞானப்பூங்கொடியே நினக்கேனூடலெனத்தாழு
நிமலப்பெருமான்றமைநோக்கி நிகழுமன்னபூரணியாய்ச்
சிறந்தவறம்யான்வளர்த்திருக்கத் திரைநஞ்சுண்டதோதமெனத்
தீயநஞ்சுண்டமுதுபொழி திருக்கையுடையபொறைமகளே
மறந்தைகொல்வேடுவனானும் வயலேருழவன்மாவடுவும்
வணிகக்கிழவிபிட்டுமென வள்ளலுரைக்கமென்மூரல்
கறந்தபாலினுவந்தளிக்குங் கனிவாய்முத்தந்தருகவே
கருணையருணைக்காமாட்சி கனிவாய்முத்தந்தருகவே. (௪)

தொண்டர்வாக்குக்கருள்வாக்குந் துணைத்தாட்குவமையாவலெனத்
தோயத்தொருகாறனையூன்றித் தூயதலங்கீடியற்றியிசை
வண்டர்வாக்குக்கினியநறை வாக்குங்கந்தவரவிந்தம்
வரம்பெற்றதுகொலதனினுஞ்செல் வாக்குப்பெறுவதெவ்வகையே
தண்டர்வாக்குக்கமுதளிக்குந் தண்வாய்க்குவமையாவலெனத்
தவத்தாற்குமுதந்தளவொடுன சசிவத்திரத்துச்சார்ந்ததென்மைக்
கண்டர்வாக்குக்களிக்குமுத்தக் கனிவாய்முத்தந்தருகவே
கருணையருணைக்காமாட்சி கனிவாய்முத்தந்தருகவே. (௬)

அரும்புங்கண்ணீர்கம்பலையோ டாகங்குழைந்துசந்நிதியே
யடைந்துபணிந்துசூழ்ந்துநட மாடிப்பாடிநன் றுதியே
விரும்புமன்பர்மலங்கழுவும் விமலானந்தவாரிதியே
விண்ணுளோர்க்குங்கிடைப்பரிதாய் வீசுமமுதமாமதியே
திரும்புந்தரமின்றோங்குசெல்வச் சிறப்பையளிக்குமுயர்கதியே
சிவனார்தம்மைமாலையிட்டுத் திருக்கல்யாணங்கொளுந்ததியே
கரும்புவளைக்கும்பார்வதியே கனிவாய்முத்தந்தருகவே
கருணையருணைக்காமாட்சி கனிவாய்முத்தந்தருகவே. (௭)

வேறு.

பூங்குறமினார்பூரஞ்சினார்ந்துதினைகவரப் புகுந்தகுருகீட்டமோட்டப்
பொற்கவணின்வைத்தமணி பட்டொனாந்தரமாதர்போந்துநீர்க்கீழ்க்குலத்தீர்
வாங்குறட்படைகொண்டெருட்டவேற்கொள்பெருமானுக்கொர்யானையீந்த
வான்குலத்தேனையும்வருத்தலென்னெனவேட மகளிர்யாஞ்சிறைபுக்கி
மீங்குறவுமுறையின்றுகும்பிட்டெகடந்த திலையெச்சிலுணிசெய்பணிந் (லே
திருகாங்கூப்பவம்மான்மகளையீந்துமகி ழெங்குலமுயர்ந்ததென்னப்
பாங்குறவுசாமினார்கொளவோங்குசோணப் பருப்பதமின்முத்தமருளே
பரமசிவவரதனம்மருவுதவமாகதம் பவளமுத்தந்தருகவே. (௮)

ஒண்முத்தமொருமுத்தமீகென்றுமேனைமுன முள்ளமுருகிக்கேட்பநீ
யோயாதுதராவாங்கமுடியாதுமற்றுமவ ளுன்முத்தமமைமெனலும்
விண்முத்தநிகருமிருகண்முத்தமார்பினிடைவீழ் மூத்தமாலையேய்ப்ப
வேர்முத்தமுளரியிலைமேன்முத்தமெனவொழுகவிம்மிநீபொருமிநோக்கத்
தண்முத்தமின்னுமென்பெண்முத்தமருள்கெனத் தன்கையிணைப்பவந்தத்
தாயாஞ்சகோரமுணமென்முத்தநிலவுநகைதந்திடுமின்னருளென்சொல்கேம்
பண்முத்தமிழ்க்கவிஞர்பாடுமெழிலருணைப்பருப்பதமின்முத்தமருளே
பரமசிவவரதனம்மருவுமொருமாகதம்பவளமுத்தந்தருகவே (௯)

யிக்குலகினிற்புகழுமெச்சமகிழைத்தடையும் விட்புவனமுற்றவிடைவாழ்
மெச்சுமமரர்க்குமன்விருப்புதவுகற்பதரு விட்டகலிறட்பமலர்வீழ்
சொக்குநிழலிற்றுலவுபொற்பணையின்மற்றவர்க டுப்புரவுபெற்றுமிகுசீர்
துற்றமணிபற்பநிதிரத்தநிதிபுத்தமுது துய்த்தனுபவித்தன்முதலா
யிக்குவலயத்தினெளிதிற்பெறவளித்திடுமெ திப்பொழுதினற்புடையர்பா
லித்தருமகத்துவமருத்துநின்முகத்திலுள திச்சையறிகிற்றியமலே
பக்குவர்கடொக்குநிறைமுத்தருவிவெற்பருணை பற்றுமுமைமுத்தமருளே
பத்தர்துதிசுத்தபதிசித்தமகினித்தம்வதி பச்சைதுதிர்முத்தமருளே. (௧௦)

## (வருகைப்பருவம்.)

மணிகொண்டமணம்வீசுமேலக்குழற்காடு மலர்வதனநுதலினீடும்
வட்டநுண்பொட்டுநென்சுட்டியும்பட்டமு மன்னுமூக்கணிசெய்சேடுந்
தணிகொண்டதளவாம்பலுள்வாமபல்வீடுந் தயாநயனமேவுதோடுஞ்
சங்கக்கழுத்துமாதங்கத்தனக்கோடு தாங்குமுடியாதுவாடும்
பணிகொண்டவிடையூடுபெட்டும்பொன்வண்டாடு பாணியுந்தொண்டர்பாடும்
பதிகவண்டமிழ்வேதநூபுரஞ்சூடும் பதாம்புயமுமமரர்தேடு
மணிகொண்டநின்சேவையாங்காணவன்போடு மருணைநாயகிவருகவே
யரியநேயர்களுருகவுரியபேறதுபெருக வருளுண்ணாமுலைவருகவே. (௧)

தொண்டாளவற்றவர்களுண்டுமகிழ்வுறவாறு சுவைநாலுவகையுண்டியுஞ்
சோராமனுண்ணுமீந்தறம்வளர்த்திடுந் தூயர்களமர்ந்துவாழும்
வெண்டாளவண்சுண்ணமாடங்கள்சிவபிரான் வெண்ணீற்றுமேனிகாட்டி
மேலோங்கிமேகமண்டலமண்மியத்தியுரி வேய்ந்தமைப்போர்வைகாட்டி
வண்டாரவிந்தநறையுண்ணவருகதிரவன் மண்டிலத்தார்ந்துசெய்ய
வார்சடையினெழில்காட்டிமதிமண்டலம்புக்கு வளரிளம்பிறைகாட்டிநீண்
டண்டாணிமலரையுமெண்டலத்திற்காட்டு மருணைநாயகிவருகவே
யரியநேயர்களுருகவுரியபேறதுபெருக வருளுண்ணாமுலைவருகவே. (௨)

கானார்ந்தபூந்துளவமார்பனென்கண்ணெனக் கண்டுவகைகொண்டுவாழ்
த்தக், கடல்வந்தபொன்மங்கையென்கோயிலென்றுளங் களிகூர்ந்துசார்ந்து
போற்ற, ஆனார்ந்தவுலகெலாந்தந்தமறைவிதியா னுதிக்குமிடமென்றிறைஞ்ச,
வுருவிலான்மகிழ்வினுணளவிலான்கழைவிலானுய்க்குமம்பென்றுதாழ, வானா
ர்ந்தவேதமந்திரபீடமார்ந்துசிவ வள்ளன்முடிவனைகொன்றையின், மணமார்
ந்ததுய்யசெந்தாமரைச்சீறடி வருந்துமெனநினையகன்றை, யானார்ந்தவின்பா
லருத்தவருமன்பாண லருணைநாயகிவருகவே, வரியநேயர்களுருக வுரியபே
றதுபெருக வருளுண்ணாமுலைவருகவே (௩)

மாணிக்கவண்ணமணவாளனார்பல்லுயிரு மகிழ்தூக்கவுவளகத்துன்
மலரணையிணைமார்போதினிலருமாசுதவண்ண மணவாட்டிபொன்னாருமென்
வேணிக்கடம்பாம்புமதிபுமுறவுறவைத்த வேடிக்கைநோக்குகென்ன
மிளிர்தெய்வமணியணிவிளங்குசடைநாகமுக விமலமதிசாணிரென்றும்
பாணிக்கலங்காரமானையறியென்னவிரு பார்வைமானுணருமென்றும்
பயில்கங்கைவைத்தெனையான்கங்கைவைத்தனன் பற்றுநம்பற்றதெ
யாணிகசனகமன்றுவாடினவரையாட்டிமகி ழருணைநாயகிவருகவே [ன்றே
யரியநேயர்களுருகவுரியபேறதுபெருக யருளுண்ணமுலைவருகவே. (௪)

கொண்டலுங்கங்கையுந்திங்களும்பாந்தளுங் கொன்றையும்மானுமனலுங்
குஞ்சரத்தோலும்புலித்தோலுமேனக் கொழுங்கோடுமேந்தியோங்கி
விண்டலத்தளவியும்மண்டலத்துருவியும் வேடராகவாரத்தினின்
மேவியன்புறவீரவருவிமிக்கொழுகியும் மிளிருமொருபவளமலையின்
முண்டகமுநீலமுங்குமிழமும்மல்லியும் முல்லையும்வள்ளையுஞ்சீர்
முன்னுபைங்கோங்கமும்மகிழமுங்காந்தளு முகிழ்த்தொர்கொடியடர்காட்சி
னண்டரும்முனிவருந்தொண்டருந்தொழவருக வருணைநாயகிவருகவே [யி
யரியநேயர்களுருகவுரியபேறதுபெருக வருளுண்ணமுலைவருகவே (௫)

வேறு.

தேடுந்தனமேதனகனமே தெய்வமணியேசெழும்பணியே
தேவதருவேமலர்மருவே தேயாமதியேநவநிதியே
நாடுந்தவமேயனுபவமே ஞானச்சுடரேசுகக்கடலே
நாதவடிவேமறைமுடிவே நவிலற்கரியபரம்பொருளே
பாடுங்கிளியேயிசையளியே பருகுந்தேனேமடமானே
பச்சைக்கொடியேயிளம்பிடியே பரமருளமேயம்பலமா
யாடுமயிலேயம்பிகையே யருணைக்குயிலேவருகவே
யலகில்விளையாட்டயருமெங்க ளம்மேவருகவருகவே. (௬)

என்பால்வருகவென்னுயிரே யென்றேயிமவான்கைநீட்ட
வென்கண்மணியென்பால்வருக வென்றேமேனைகண்காட்ட
வன்பாலிருவீர்வாதிட்டு வருகென்றழைத்தால்வருவேனே
மற்றும்யானேவருவேனீர் வாளாவிருமினெனக்கூறித்
தன்பாறன்பாலெனத்தருக்குந் தந்தைதாயர்தண்கரத்தில்
சார்தல்போலவேமாற்றிச் சதங்கைகலிக்கவோடோடி
யன்பாலிருவர்நடுவணம ரருணைக்கிளியேவருகவே
யலகில்விளையாட்டயரு மெங்களம்மேவருகவருகவே. (௭)

மிடித்தாமரைக்கைநொடியினற விழிக்கும்விழியாமயிலுமியன்
மேவுமயிலும்பகைகடக்க விரைவிற்றருகென்றிலையோனு
முடித்தாமரைச்சேர்தோட்கரும்புமொழியின்னமுதும்பசிதீர
முன்னீதருகென்றளமிளகிழத்தமகனுங்கேட்கமுன்னந்
தடித்தாமலாக்குத்துயர்செயம்மந் தருவன்வருகென்றணைத்தெடுக்கச்
சாமிநாதனதுவயிற்றான் றனக்கேயெனக்கேயெனவோட
வடித்தாமரைச்சேப்புறத்தொடரு மருணையனமேவருகவே
யலகில்விளையாட்டயருமெங்க ளம்மேவருகவருகவே. (அ)

வஞ்சமிருந்தமனத்தாலே வளருங்கொடியவினையாலே
மன்னுமூன்றுமலத்தாலே மயங்கிப்புகுந்தபிறப்பாலே
கஞ்சம்படருமிலைமேலே கலந்துதளும்புஞ்சலம்போலே
கலங்குமடியாருணர்வாலே கனிந்துள்ளுருகிப்பணியாலே
தஞ்சம்புகுந்துன்னருளாலே சரணகமலநிழாலே
சாந்தியடையுந்திறம்போலே தழைக்கவெளியேத்தம்பாலே
யஞ்சந்தொடருநடையாளே யருணைப்பிடியேவருகவே
யலகில்விளையாட்டயருமெங்க ளம்மேவருகவருகவே (கூ)

மருளேயுடையபவப்பிணிக்கு மருந்தேவருகவாழ்வளிக்கு
மணியேவருகமனம்விளக்கு மதியேவருககுறையாத
பொருளேவருகமாற்றறியாப் பொன்னேவருகபொன்னய
பூணேவருகவேதாந்தப் பொலிவேவருகசித்தாந்தத்
தெருளேவருகசிவஞானத் தேனேவருகதிருவாளர்
தேடிவைத்தபேரின்பத் திரளேவருகசன்மார்க்க
வருளேவருகதிருவருணை யருந்தாமுலையாய்வருகவே
யலகில்விளையாட்டயருமெங்க ளம்மேவருகவருகவே (கo)

(அம்புலிப்பருவம்.)

தன்னுதனடிமலர்கண்மறவாதவத்திரித் தவமுனிகளுற்றதானுந்
தனதாயையனநேயைகனதூயையனருமைதகவன்புவைத்தலானு
மன்னுதாத்தினப்பான்முடிக்கணியா வனைந்திடும்பெருமையானும்
வயவின்றுதானீன்றமன்னுயிர்தழைத்திட மகிழ்ச்சிவிளைவித்தலானு
மின்னுதகற்றியருடன்வித்தினோரள ரிபெயிர்வளர்த்தலானு
மெம்பிராட்டியுநினைச்சமமாகவெண்ணியே யிங்குவருகெனவழைத்தா
ளன்னுதவுன்னுடையதிட்டமென்சொல்லுகே மம்புலீயாடவாவே
யண்ணுமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே (க)

தருமவாக்கம்மிசையினுளிவளுநீயுமோ தருமவாக்கம்மிசையினன்
றாமரைக்கண்ணன்பினுளிவளுநீயுமோ தாமரைக்கண்ணன்பினன்
கருணையாகத்திகழுவாளிவளுநீயுமோ கருணையாகத்திகழுவான்
கனகமலைவானிலவினுளிவளுநீயுமோ கனகமலைவானிலவினு
னிரவலர்க்கனமளிப்பாளிவளுநீயுமோ விரவலர்க்கனமளிப்பான்
னிக்குவிலையப்புதையினுளிவளுநீயுமோ விக்குவிலையப்புதையினு
னருமையினழைக்குமெம்மம்மைநிகர்போலுநீ யம்புலீயாடவாவே
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே (௨)

மெய்ஞ்ஞானமணம்வீசபூங்கோதையிரவுண்டு மிளிருமுகமதியமுண்டு
வியனயனமானுண்டுசெவ்வாய்க்குமுதமுண்டு மென்மூரன்மீனமுண்டு
விஞ்ஞானருண்டுமகிழருளமுதமுண்டுபர வெளியுண்டுசிவசூரியன்
விழைவுண்டுமூழ்கியெழவின்பவாரிதியுண்டு மேவுகுணமேருவுண்டு
பொய்ஞ்ஞானர்காண்பரியமேலானபதமுண்டு புரணவாழ்வுண்டுண்டுகொன்
புண்ணியமலர்ந்தபொற்கொடியிடையுன்னினுமிக்க புகழ்கொண்டதன்மை
யஞ்ஞானநீங்கிநீயெஞ்ஞான்றும்வாழலா மம்புலீயாடவாவே [தேர்ந்தே
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே (௩)

பங்கயக்கண்ணனும்பங்கயச்செல்வியும் பங்கயத்தணைவிதியும்வெண்
பங்கயப்பாரதியுமாலுமயிராணியும் பஞ்சபாணனுமிரதியுஞ்
சங்கையற்றுணர்தவருமவர்மனைவிமாருமிவண் சந்நிதியடைந்துசூழ்ந்து
தாழ்ந்துவிழிவார்ந்துதுதிகூர்ந்துகளிகூர்ந்துமிகு சம்பத்தடைந்திருப்ப
வெங்கயப்பிணியுமாசாபமும்பாபமும் மெய்க்கூனுமற்றுமுளநீ
விதிகொலோமதிகொலோவிவணடைந்திடரெலாம் வீட்டுகிலையேனுமெ
யங்கையற்கண்ணியருள்வைத்தழைத்தனள்காண்டி யம்புலீயாடவாவே [ந்தா
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே. (௪)

செம்புலிபதஞ்சலியெனுந்தவர்கள்போற்றத் திரும்புலிநகர்க்கணடனஞ்
செய்தருளிவாட்புலியெனும்பெரியகோட்புலி சிறப்புலிக்கருளுநாதன்
வெம்புலியுரித்தனனெனப்புலவிநீரும்வண யெப்புலிநகைத்துரைக்கின்
வெற்றிகொளாமுமொருவன்புலியுரித்துமென வேண்டிவருமென்றன
கம்புலியிருத்தியோதாழாதுவருதியேற்கவுரியருள்பெற்றுய்யலாம் [னெனக்
கங்கையொடுபழகுதிங்கட்புலியெனுமெனைக்காயினென்செய்வனென்னி
லம்புலியெனச்சொலித்தப்புவிப்பேருண்மையம்புலீயாடவாவே
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே (௫)

திருமான்மகிழ்ந்துபுணர்கருமானயந்துபெறு செய்யமாமளினனீன்ற
திலத்தமைப்பெண்மானையிச்சையான்மானுருச் சேருபுதாத்தவருணைப்

பெருமானெனுவர்தவந்தமானீக்தமான் பெம்மானளிக்கவுய்ந்தான்
பிரமனும்பவநீங்கியேத்தினன்குரவற் பிழைத்தபவநீயுமகல்வா
யொருமானிவர்ந்துனனுமருமானிழைத்தபவ மோவியிந்திரவிமான
மூர்ந்தும்பருற்றவித்தலமகிமையோர்ந்தடையி னுவமானமற்றவெங்க
ளருமான்விழிக்குமரிதருமான் மகிழ்ச்சிபெரிதம்புலீயாடவாவே
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே. (சு)

காரஞ்சுமேனிமாமாயனும்பிரமனுங்காணரியவடிமுடியெமான்
கனவடிவநுதல்விழியொர்கடவுணந்திருக்கார்த்திகைநனுடபமோ
டோரஞ்சுதலமவையினித்தலப்பூதமாயொளிர்தழற்கடவுண்மகவா
யுற்பவித்தாறுமுகனமைந்தன்மெய்த்துணைவனுயுளனென்றுநின்னைநோக்கி
வாரஞ்சுவர்க்கவமுதன்குவாருள்குமிடைவக்துபொழிகருணைமாதா
வருகென்றழைத்திடப்பெற்றனையுனக்கெத்த வரம்வேண்டினுந்தருவளிவ்
வாரஞ்சுலாவுநகைவாய்க்குமுதவனகையுடனம்புலீயாடவாவே
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கினியொ டம்புலீயாடவாவே. (எ)

தேசத்தினுயருங்கலைச்சுரங்கவுரிநகர் தேசுநகர்மூத்திநகரஞ்
சிவபுரந்தென்கயிலையென்னுமருணைத் தலஞ்சேர்தலிருவினையொப்பதா
நேசத்தினற்றீர்த்தமாடன்மலபரிபாக நேர்ந்ததாந்திருமலைவலந்
நினைவுடன்செயதல்சத்தினிப்தமாஞான நீள்சுடர்ச்சேவைவீடா
மாசத்திகலியாணிசிவகாமியபிராமி வாமியிவளருள்வடிவமிம்
மகிமைபெறுதலமென்றுநீயறிகிலாய்கொலோ மண்ணோரும்விண்ணோரும்
தாசத்திபெறுசந்நிதானத்திபத்தியுடனம்புலீயாடவாவே (வங
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கினியொ டம்புலீயாடவாவே (அ)

மாறுஞ்சுமரவினைக்கவனுக்கிமைந்தர்க்கு வன்னிவாகனமளித்தோன்
மற்றுமிந்திரனிரவிவருணன்குபேரனையுமாற்றியவர்வாகனந்தா
னேறுஞ்சுதந்தரனியமனைக்கடாவிழித்திருகாலினேகவிட்டோ
னேமாந்தரின்னையும்விமானத்துடன்பிறிந்தினியவமுதாச்சுவைத்தோன்
வீறுஞ்சுராரிமகிடன்றன்னைமதியாது வெம்மைசெயவடமையிவடான்
விந்தைதனையுந்தவவன்வந்தவனெடுந்தலையைவெட்டிமிதியடியாக்கினு
ளாறுஞ்சுபாவமில்லளவளையுன்மேல்விடுமு னம்புலீயாடவாவே
யண்ணாமலைக்கினியவுண்ணாமுலைக்கனியொ டம்புலீயாடவாவே. (கூ)

பாசிவழிவழியடிமைபுரியுமவர்கொடியவினைபாற்றவருண்ஞானசோதிப்
பாசிவபிரான்மகுடகோடீரமன்னிவாழ் பாக்கியம்பெற்றுளயெனச்

சிரசிவர் பகீரதிசெய்போதனைக்குள்வாச் செருக்கினையிருத்தியொருகாற்
சீறுமிவள்சீற்டியின்வறனாற்றினெருசார்பு சிதையோடமாதிகண்டாய்
விரசிவளைமதியாததக்கன்செய்வேள்வியினை வீரபத்திரனழித்த
விக்கதைதனையறியாய்கொரேய்ப்புண்டுகொய்ப்புண்ட வெள்ளைமதிஙின்னை
ராசிவாதக்கையபயக்கையம்பிகையுமையொடம்புலீயாடவாவே (மொழியா
யண்ணாமலைக்கினியயுண்ணாமுலைக்கனியொடம்புலீயாடவாவே. (க0)

(அம்மானைப்பருவம்.)

வாளாவிருக்கபொழுதென்னுடையதாமென்று வாணியுரையாடமலர்நேர்
வண்கையினெடுத்ததிதியென்னுடையதேயென்று மாமாதுவாதாடமே
னீளாருமைவிழிபரப்பிநீயாடவதை நின்றவிருவோருநாடி
நெஞ்சமயலாடநின்னகையினுமாதுமுக நிழலாடவமராடிமேற்
கோளாயநீக்கவருமீளாவருங்காலை கோகனகைவென்றேனெனுக்
கூடதாடமற்றுமுளமாதர்கள்குழீஇக்குழீஇக்கொண்டாடவேத்திவாழ்த்தி
யாளானவடியவர்க்கருளம்மைமுத்தான வம்மானையாடியருளே
யருணபுரக்குமரிகருணாகரக்கவுரி யம்மானையாடியருளே. (க)

வாரமாமலர்சொரிந்தர்ச்சனைபுரிந்தன்பர் மனமுவக்துய்யும்வண்ணம்
வருகவருள்பெறுகவெனவாய்மலர்தல்போன்மெய்ம்மறைச்செஞ்சிலம்புகொ
மீரமாமலரன்னதாணடைக்கருள்விழிக் கின்மொழிக்கொப்பியாம்வே (ஞ்சு
றிலையென்றுவருவக்கிராங்கமறுகாறத்தை யென்னுமிவைபோர்விநாவிச்
சாரமாவன்னமளிசகமென்றுவந்திலீர் தக்கவாலீர்போமெனுத்
தண்கையினெடுத்தெடுத்தந்தரத்தெறிதல்போற் றுதியர்கள்சரிசரியென
ஆரமுத்நிலமும்பச்சையுமிழைத்தநல் லம்மானையாடியருளே
யருணபுரக்குமரிகருணாகரக்கவுரி யம்மானையாடியருளே. (உ)

வெம்மைதருமும்மைமதிலெய்தநான்வளைவில்லும் வீற்றிருக்கின்றவில்லும்
மேனியும்வேய்மலருமீக்கோளுநம்பெயரின் மிளிருவனவெனவுவந்து
நம்மையும்பணிகொண்டநாதர்மணவாட்டியாய் நல்விமயவல்லியான
நாரிக்குவிளையாட்டம்மனையளித்தமெண நவில்நிழைநாகர்வைத்த
செம்மைமாணிக்கமிவைகாண்கவெனவிருகோள்கள்சிந்தைதனிணுணமெய்தச்
செங்காந்தளங்கையினெடுத்தந்தாத்துச் செலுத்துவனபோலவெங்க
ளம்மைசிவகாமிதவவாமியபிராமிமணியம்மானையாடியருளே
யருணபுரக்குமரிகருணாகரக்கவுரி யம்மானையாடியருளே. (ந)

கனக்கவளநிலவுகயிலைபிலானுசீபுமோக் கலைபின்மிதுகரிபிடியதாய்க்
காதலினளித்தகணபதிவேழமுணவினிய கவளமின்றளவுமீவாய்

மனக்கவலைதீர்ந்துய்யவாதலர்க்கன்னம் வழங்கறம்வளர்த்துநின்றாய்
மற்றும்யானின்னடிக்குற்றேவல்செய்வனின் மருங்கிலைவளர்த்திடுத்தே
னெனக்கவணமன்னமின்றோநாவலூரருக் கேறும்வாகனமுமானே
னின்புறும்பொற்சேடியுடனுதித்தேனென வேத்தும்வெள்ளானைபுண்ணா
வனக்கவளமெறிதல்போலழகானமுத்தான வம்மானையாடியருளே
யருணபுரக்குமரிகருணாகரக்கவுரி யம்மானையாடியருளே. (௪)

நம்மானையனையாரையாணைநீரோடையி னலித்துமான்மானையேவி
நம்மையுமழித்தவனைாமழித்திடுதுமென நற்றருவனத்தரோட்டும் (கீழ்
வெம்மானைமுனமானைபுரிகைக்கொள்பெருமானைவெஃகிவெணிலாக்குடைக்
விரைவிதழிமாலைவேய்த்தெனையாசைப்பரென வேணிமிசையினிதுவாழும்
கம்மானையசையாதசைத்தொழுகவைப்பதுவ் கண்மானமகிழ்வியுமெனக்
கலைமானமலர்மானைவிழிமானினுற்சொலிக் கனகவம்மனைவீசியவ்
வம்மானைமுடியசைப்பிக்கும்விதமெனவம்மனையெம்மானையாடியருளே
யருணபுரக்குமரிகருணாகரக்கவுரி யம்மானையாடியருளே. (௫)

வேறு.

மாயிருஞாலத்துயிர்களென்மகவுகண் மற்றவையின்புறநீர்
மன்னுதிரல்லதுதீமைபுரிந்து வருத்துதிரேலொளிகூர்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன் வியாழந்கவில்வெளிசனிகேது
நண்ணுமிராகுவெனுங்களைமாற்றிநவக்கோள்வைத்திடுவேன்
சேயிருகைத்தலவல்லமைநோக்குதிர்தெரிவுறவேண்டினிவண்
செய்குவனென்றுபயங்காட்டுதல் போற்றிகழ்தருமணியா
வாயினவம்மனைகொண்டெமதம்மனையாடுக வம்மனையே
யருணைக்கோர்நிதிகருணைப்பார்வதியாடுகவம்மனையே. (௬)

வலைமான்வலைமானெனமாமலரோன் மாழ்குறர்சிவவெனவே
மழுமானேந்தியொர்செழுமானேறிமுன்வருகோமானொருபான்
மலைமான்மலைமானீகையினுன்விடுமெணியம்மனையானே
மற்றொருநொடியிற்பற்றுவனென்றதுமாட்டாதோடோடிக்
கலைமான்கலைமானென்னவயர்ந்திடல் கண்டுநகைத்திடுவார்
கைப்பற்றுவலெனவொப்பச் சூண்மொழிகழறிப்பற்றகிலா
தலைமானலைமானுயிடவம்மனை யாடுகவம்மனையே
யருணைக்கோர்நிதி கருணைப்பார்வதியாடுகவம்மனையே. (௭)

சமரச்சூர்முதலொருவலயக்கூடயிருன்விடுமம்மனையே
நகைகமைச்சேயெனவருள்வைத்தேபெறுசாமளையம்மனையே

கமலத்தோனொடுமாலுமுற்றேடுறுகாரண வம்மனையே
கனகச்சோதிமெய்வடிவுற்றே றவொளிர்காதலரம்மனையே
நிமலத்தூமலர்கொடுகிற்பூசைசெய் நேயருளம்மனையே
நிகரத்தேவொடுவளர்கற்பூரணி நேயவியம்மனையே
யமருற்றேயிருவிழிவைத்தேமினி யாடுகவம்மனையே
யருணைக்கோர்கிதிகருணைப்பார்வதி யாடுகவம்மனையே (அ)

காரணிநீலகிரீவன்முனூர்நகைகாலையின்வெவ்வலிசேர்
கார்முகமாய்நெடுநாளொடு நீடலைகால்வளை வண்மினனால்
தாரணியேமுதலாவுலகினுமோர் தாயுமைமகைம்மிசையே
சார்வுறின்மேலெழுசீர்முகமாகுவருணிதுசெவ்வியெனு
யோரணிமேருவநேகவிநோதமொமாடேய்தருமம்மனையோ
யாமறியோமெனவாணிபொனேதிடவேமுறுமின்னகையோ
டாரணிநீபொனினயனபாணியினாடுகவம்மனையே
யாதியண்ணாமலைநீதியுண்ணாமுலையாடுகவம்மனையே (௯)

மூவகையாருயிர்மூவகையாமலமூசுறுமம்முறையே
மோசனமாயுயர்சனதோர்பதமூதறிவின்னடைசேர்
மேவருதாயுனதாருளேயெனவேதமுதன்மொழியான்
மேலவர்தாமுணர்வார்சிறியோர்களுமேலுணருந்நெறியே
மாவளர்தூமணிசேமணிநின்மணிவாய்குணமும்முறையே
வாவுறவாயினகானுதிராவெனவானெறிதன்மையினே
ராவலின்யாமுயநீயருளோடிவையாடுகவம்மனையே
யாதியண்ணாமலைநீதியுண்ணாமுலையாடுகவம்மனையே (௧0)

(நீராடற்பருவம்.)

உரைதரும்பொருளாயவொப்பிலாப்பரப்ருக் குடலாகியளவிலாத
வுயிரோலாங்கருவிலாதீன்றருள்சுரந்தாட்டு முண்ணாமுலைச்செல்விநீ
வரைபுரிந்திடுதவக்குமரியாதலினிங்கு வந்துவந்தாடவென்ன
மாதவஞ்செய்தனனெனக்குங்குமஞ்சாந்த மலர்காவிமணிபொனூரந்
திரையெனுங்காமேந்திரளினமுகவல்லிவாய்த் திகழ்முத்தமூரல்காட்டிச்
செறிநீலநயனம்பரப்பியுள்ளங்குளிர்மை சேர்ந்துபுள்ளொலியினூற்கூய்
விரையின்வருகென்றுநின்சேடியாந்திருநதியின் வெள்ளநீராடியருளே (௧)

செம்மையுறுமாதவஞ்செய்துனைப்பெற்றுமகிழ் சீர்த்திமவான்சிவபிரான்
றீக்கண்ணர்தீக்கையர்திவடிவர்தீக்காடர் தீக்கடவுளென்றறிந்து

நம்மையுடையாரென் றுனைத்திருமணஞ்செய்து நல்கிமகிழ்மல்கியுற்று
ணம்பாதியாருடற்செம்பாதிகொண்டுசீ ரானுருவாமத்துறைதலா
லம்மைநின் பூமேனியழல்கொண்டிருக்குமெனவறிவிலேமெண்ணியெண்ணி
யாற்றுமையாலிஃதாசாற்றுதிருந்திடவு மாளாமல்வேண்டுகின்றோம்
வெம்மையாமகலமிகுதண்மையாந்திருநதியின் வெள்ளநீராடியருளே
விழவுமலிசோணவரையழகுபொலிஞானபரை வெள்ளநீராடியருளே (உ)

ஏலவார்குழல்பெரியநீலமுகிலிற்சரிய வேமாந்தபாசியிரிய
வெழின்முகத்தருளொழுகவணசங்கவீர்முழுக விதழ்கிளரவல்லிதளர
கோலவாரமுதவிழிசெய்யவொளிசெய்யவெதிர் கொண்டகருநீலமைய
குலவுகந்தாமிலகவளைவிலகவளர்கொங்கை குடையநீள்குமிழிபுடைய
மூலவாணவமோடநோக்குபுறவடிநீட மோட்டாணவமகன்றுவாட
மூர்த்தமெனுமெட்டிலொருமூர்த்தமிஃதாகுமென முன்னரியுளமன்புமன்னி
மேலவாவளையிகுளைமாருடன் றிருநதியின் வெள்ளநீராடியருளே [ன்னி
விழவுமலிசோணவரையழகுபொலிஞானபரை வெள்ளநீராடியருளே (ங)

கண்ணினதிசயமுறக்காணினுநினைக்கினுங் கையினாற்பரிசிக்கினுங்
காதலுடனுடினும்பருகினும்வினவினுங் கழறினுங்கடல்சூழ்ந்தவிம்
மண்ணினதிபாதகமெலாநீக்கியிம்மையு மறுமையுந்சுகமளிக்கு
மாட்சியொடுகாட்சிதருமெண்ணின் திறதலையின் மன்னுமென்னுடைய
நண்ணினதினுயர்வுடையவென்பர்களிலக்கணயந்தேருநாவலோர்க (நாம
ணுதரண்ணுமலையினருளருவியானிறைய நன்மையுளவெனையொக்குமே
விண்ணினதியெனல்போலவொலிசெயுந்திருநதியின்வெள்ளநீராடியருளே
விழவுமலிசோணவரையழகுபொலிஞானபரை வெள்ளநீராடியருளே (ச)

தொக்காமடந்தையர்கள்சூழவருமயிராணி தூய்மையிற்சுரநதியெனுச்
சொல்லுமுனமம்மைநீசூர்த்தநோக்கொடுபோய்த்துதோய்ந்துதோய்ந்தாடனோ
தக்கநதியன்பினொடுகாளிந்திநதியெனச்சார்ந்துகலைமாதுகளபஞ் (க்கித்
சாந்துகுங்குமமஞ்சன்சார்த்திநீராட்டியிதுதண்பவளமேனிகொண்ட
நக்கர்கமகிழ்சோணநதியென்னவதுகேட்ட நளினையென்னதிநதியெனு
நவிலவோர்சங்கையிலையென்றனைபானகையினந்நதியெனச்சகலரு
மிக்காவமுறவாழ்த்தியேத்தவொளிர்திருநதியின் வெள்ளநீராடியருளே
விழவுமலிசோணவரையழகுபொலிஞானபரை வெள்ளநீராடியருளே (ரு)

வேறு.

கொற்றக்குறிஞ்சிக்குமரனுக்குக் கொடியும்பாலைக்குமரிக்குக்
கொடுங்கோளரியுஞ்செழுமுல்லைக் கோவிந்தனுக்குக்குழல்வேயு
மற்றமருதப்போகிக்கு மகிழ்வுசெய்தல்வருணனுக்கு
மன்னும்புலவுதிர்மணமும்வழங்குவேனிற்கென்னவிப்பே

னுற்றதுணையேயென்னனையேயுவந்துநீவந்தெனைத்திளைக்கி
னுருகிப்பெருகிப்பேரின்பவுததிபடிவேனெனவொலிக்குங்
கற்றபெரியர்சூழருணைக் கமலைப்புதுநீராடுகவே
கமழுமுண்ணாமுலையமிழ்தேகமலைப்புதுநீராடுகவே. (௬)

குயின்மேற்சென்றமீன்றடவுங்கொக்கைக்கிழித்தங்கொருகூற்றைக்
கோழியாக்கிப்பிடித்துமற்றைக்கூற்றைமயிலாய்ச்செய்தந்த
மயின்மேற்புகுந்தசுரயானைவளர்த்தபெண்யானையைமணந்து
வணத்துட்பொன்மானீன்றகுற மானைக்கலந்தபெருமானை
வயின்மேற்பெறுதுபெற்றமலைமானேமானேந்தம்மானை
மருவுமயிலேயிமவானை மகிழ்வின்வேட்டதவமேனை
கயின்மேற்கிளியேதிருவருணைக் கமலைப்புதுநீராடுகவே
கமழுமுண்ணாமுலையமிழ்தே கமலைப்புதுநீராடுகவே. (௭)

மதனைப்பொடித்தவசந்தேசர் மருவுந்திருக்கார்த்திகைதீப,
மகிழ்ந்துசேவைசெய்வதற்கு வருமெய்யடியாரிளைப்பாற
விதமாத்தென்றலெதிர்கொள்ள வின்சொற்கிளிகள்வருகென்ன
வினிதினளிகளிசைபாட வெறிலார்மயில்கணடமாட
மதுரக்கரும்புமிளநீரும் வாழைக்கனியும்பலாக்கனியு
மாவின்கனியுநறுந்தேனு மலருமடைக்காய்முதலாய
கதுமென்றளிக்கும்வளனருணைக் கமலைப்புதுநீராடுகவே
கமழுமுண்ணாமுலையமிழ்தே கமலைப்பதுநீராடுகவே. (௮)

பண்ணார்தமிழினருட்பாடல் பாடிப்பாடித்தலங்கடொறும்
பரவிப்பரவிவருங்காழிப் பாலருச்செவ்வாய்ப்புதல்வ
ரண்ணாமலையார்த்தரிசித்திங் களவினுமமவர்க்கிருப்ப
வவையெலாம்விட்டுன்னுடைய வருமைத்திருநாமம்முதலா
வுண்ணாமுலையென்றெடுத்தோத லுண்டபாலினுவப்பென்றே
வொருங்கேயுன்மேனியைத்திளைக்கவுருகிக்கமலமுகலைக்
கண்ணேறுக்கல்காட்டருணைக் கமலைப்புதுநீராடுகவே
கமழுமுண்ணாமுலையமிழ்தே கமலைப்புதுநீராடுகவே (௯)

தெற்குத்திசையிற் பெண்ணைநதி சிறந்தவடபாற் சேயநதி
சேவிருப்ப மேற்றிசையிற் செறிபுண்ணியப் பேர்நதியிருப்
நிற்குத்தொழும்பு செயுமுதன்மை நேயமுளமாநதி யென்றோ
நீவந்தாட விசைந்ததுதா னிகழுமெங்க டவந்தாயே
பொற்குன் றளித்தவிளம்பிடியே புநிதவாழ்வே மெய்ஞ்ஞானம்
பூத்தகொடியே மறைமுடிவே புலவோர்கலந்து கொண்டாடிக்
கற்குஞ்சங்கத் தமிழருணைக் கமலைப்புது நீராடுகவே
கமழுமுண்ணாமுலையமிழ்தே கமலைப்புது நீராடுகவே. (௪௦)

வேறு.

மாமேவுவச்சிரக் காலூட்டிமிக்கவள வண்பவள விட்டமூட்டி
மன் னுமெழின்முத்துவட மின் னுறப்பூட்டியுயர் மாமணிப்பலகை மாட்டித்
தேமேவுகமலாசனங்கூட்டியற்புதச் சித்திரந் தீட்டிவானத்
தெய்வதத்தச்சன்செய் யழகெலாங்காட்டியித் திருவூச லாடுகென் று
மேமேவுமலர்சூட்டிமலர் மாதிறைஞ்சயாழ் மீட்டிகாம களிசைக்கும்
வேதகீதப்பாட்டி னாமாதராட்டின் விநோதம் வேட்டினிதமர்ந்து
பூமேவுபதநீட்டியாட்டி யெம்பெருமாட்டி பொன் னூச லாடியருளே (யருளே.
பொன்னகரமென்னவமை தென்னருணையன்னையுமை பொன் னூசலாடி

பாங்காரநின் றகம் படிமெய்த்திருத்தொண்டு பண்ணுமாவிந்தை யன்பின்
பாவருண்முகத்தையுந் தின் னுங்குழைத்தோடு பாய்ந்தோடு நயனத்தையு
மோங்காரவத்தத்தை யோர்ந்துரைசெயத்தத்தை யுலவியமரத் தத்தையு
முண்ணாத்தனத்தையு முந்தித்தடத்தையு முகந்தபாதத் தையும்பார்த்
தாங்காரநீக்குபர மானந்தவாரியின்னு ராவிந்தமலரின் மேன்மே
லரவிந்தமலருமரவிந்தை நீயேயென வஞ்சலித்திட வணைத்தே
பூங்காரனகமுடிதுளக்கிமகிழ்பூத்தகொடி பொன் னூச லாடியருளே (யருளே
பொன்னகரமென்னவமை தென்னருணையன்னையுமை பொன் னூச லாடி

தண்ணியவிளம்பிறை யணிந்தசடையொருபுறந் தருமலர்க் குழலொருபுறஞ்
சாற்றரியமும்மலந்தெறுசூலமொருபுறஞ் சந்தவுத்பல மொருபுறந்
திண்ணியபடங்கொண்டபைந்நாகமொருபுறஞ்செம்பொனற்பணியொருபுறஞ்
செல்வமெல்லாந்தருந்திரு வெணீறொருபுறஞ் செழுமணச்சாந் தொருபுறம்
பண்ணியல்பழம்பாடல் புகழ்செய்கழலொருபுறம் பாவுஞ்சிலம் பொருபுறம்
பவளநிறமொருபுறம் பச்சைநிறமொருபுறம் பார்த்தன்பர் தொழவானிடம்
புண்ணியமலார்ந்தகொடி நின்சேவையென்சேவை பொந்நூச லாடியருளே
பொன்னகரமென்னவமை தென்னருணையன்னையுமை பொன் னூச லாடி
(யருளே. (௧)

தென்னாடுசெய்தவம் விளங்கவருதில்லைச் சிதம்பரச்சிற் சபையினிற்
றிருநடம்புரியுநின்னாதர் நீபொன்னூசல் சேர்ந்தாடு காட்சியுன்னி
முன்னாடுநாடகம் பின்னாடுவோமென்று முந்தியுனை நாடுமெல்லை
முடியாடுநதியாடு மாவாடுகதிமாது முகம்வாடு மெனினுமாடு
நின்னாடுமெவரையு முன்னாடுமூவகைநா ளீயாடுகிற்றி யலையோ
நெஞ்சாடுமன்பினொடும் யாமாடலருமையோ நிகழ்நாடு பலவுநாடும்
பொன்னாடுகோடுநாடுவாழ்செல்வியே பொன்னூச லாடியருளே (யருளே.
பொன்னகரமென்னவமை தென்னருணை யன்னையுமை பொன்னூசலாடி

நந்தியம்பகவானு நாரணனுநான்முகனு ஞானமார்க் கண்டமுனியு
நண்ணுமெய்க்கவுதமசதானந்தமுனிவரு நவிலரிய துருவாசனு
மிந்திரன்முதற்பால ரெண்மரும்வசுக்களா மெண்மருங் காந்திசாலி
யியல்கலாதரனுமொள்ளிர் வச்சிராங்கதமன்னு மிசைவார்ந்த பிரதத்தனுஞ்
சுந்தரதிலத்தமையும்வண்புளகவசானுஞ் சூழ்ந்தின்னு மின்னுமளவி (டசம்
றொண்டரும்பேறுபெறு மித்தலத்திறைவர்பால் தோய்ந்துலகவுயிர்மக்க
யுந்திமகிழ்வாழ்வின்வளர் கருணைப்பெருந்தேவி பொன்னூசலாடியருளே (ளே
பொன்னகரவென்னவமை தென்னருணையன்னையுமை பொன்னூசலாடியரு

பாணியின்முத்தவடமதுபற்றி மலர்மாதுபாங்கர்நின் றினிதுகூறப்
பாரதிநல்வீணையிற்பாகுசெந்தேனெனப் பாடலிருசெவியின்வார்ப்ப
நீணிதியின்மாலையொடுகற்பகப்பூமாலை நீட்டியயிராணியேத்த
நின்னருளினென்கணவனுய்ந்தனனெனாவிரதி நேயமாத்துதிவிளம்பப்
பேணிவடசாலியனசூயைமுதலுத்தமிகள் பிரியமுடன்வாழ்த்தல்செய்யப்
பின்னுமுளகன்னியர்கணன்னயமுடன்சூழ்ந்துபெரிதுமகிழ்கொண்டுநாடப்
பூணிலகுபொற்கொடியினருள்பூத்த மரகதம்பொன்னூசலாடியருளே (ளே.
பொன்னகரமென்னவமைதென்னருணையன்னையுமைபொன்னூசலாடியரு

துங்கமலைவேந்தென்னு மிமயமலைநின்றந்தை துதிதவமியற்றியீன்ற, சுதையுனதுபெருமையையு மருமையையுநோக்கியே சுரரெலாம் போற்றல் செய்யத், தங்கமலையில்லதாய் வெள்ளிமலையில்லதாய்த் தங்குமுயரண்ணாமலைச், சாமிநஞ்சாதியென் றுனைமணத்தீர்ந்தனன் றருகற்பினுக் காசியாய்ச், செங்கமலைவெண்கமலைவாழ்த்துறக்கைம்மலைச் செம்மலைத் தணிகைமுதலாச், செழுமலைமேலாமுலவு சேயையும்பெற்றவர்கள் செருமலைவிநோதநாடிப், பொங்கமலைநின்பெரிணூசலேஸ்மையாட்டுவாய்பொன்னூசலாடியருளே,பொன்னகரமென்னவமைதென்னருணை யன்னையுமை பொன்னூசலாடியருளே.(அ)

சன்மலைநிகர்த்தவெமதுள்ளங்கரைந்துருகு கானவிசைபாடுமளியே
சங்குலும்பகலுநல்லன்பருக்கெதிர்வந்து காதலொடுபேசுகிளியே
பன்மலையும்வளரவளரண்ணாமலைப்பிரான் பவனிவருசுத்தவெளியே
பலவுயிருமின்புறவானந்தவடிவினிற் பயிலவருண்மேவுதளியே
தென்மலைத்தமிழ்வடமொழிக்குமுதலாய்வந்த சீர்ப்புலவருக்குளொளியே
தெளிவிலாவென்னுடையபுன்சொன் ஞானன்சொலாய்ச்சிந்தைவைத்துதவுதெ (ளியே
பொன்மலையில்வந்துமாணிக்கமலைமருவுபிடிபொந்நூசலாடியருளே
பொன்னகரமென்னவமைதென்னருணையன்னையுமைபொந்நூசலாடியரு (ளே

மூர்த்தியின்பெருமையுங்கேத்திரப்பெருமையு மூன்றுதீர்த்தப்பெருமையும்
முரசவாத்தியமாகிவாத்தியப்பெருமையு மூலவாகமமுறையினர்
கார்த்திகைச்சுடர்விழாக்காட்சியின்பெருமையுங் கண்டுகளிகூர்ந்துதொண்டர்
காதலொடுநதிமூழ்கிவெண்ணீறுபூசிக் கருத்துருகியஞ்செழுத்து
மார்த்தியாயுச்சரித்தன் தானஞ்செயு மற்புதமடப்பெருமையு
மணிமாடமணிமதின்மண்டபங்கந்தவன மாட்சிநவகோபுரச்சீர்
பூர்த்தியுறுபெருமையுமேன்மேலும்வளரநீ பொந்நூசலாடியருளே (ளே.
பொன்னகரமென்னவமை தென்னருணையன்னையுமைபொந்நூசலாடியரு

காவைநிகர்குழல்வாழி கருணைபொழிமுகம்வாழி கருநீல நயனம்வாழி
கனமருவுவேதங்கனிந்த செவ்வாய்வாழி கமழ்முல்லை மூரல்வாழி
பாவைவினவுங்கதிர் மணிக்குழைச்செவிவாழி பகருங்கிலிய நாண்சூழ
பகர்கம்புகந்தரம்வாழி வேய்த்தோள்வாழி பைங்காந்தளங்கைவாழி
கோவைமணிமுத்தமணி மார்பின்வளர்ஞானக் குரும்பையங் கொங்கைவாழி
குலவுமேகலையிலங் கிடைவாழிபரிபுரங் கொஞ்சுபதம் வாழியென்று
பூவையர்கள்மங்களம் பாடிநின்றாடநீ பொந்நூச லாடியருளே (ருளே.
பொன்னகரமென்னவமை தென்னருணையன்னையுமை பொந்நூசலாடி…

உ

## வாழ்த்து.

### வெண்பா.

அண்ணாமலைவாழி யன்பர்குழாம்வாழி
யுண்ணாமுலைவாழி யோதுதமிழ்—எண்[illegible]
வாழியுலகுபிரான் வாழிவான்வாழிமன்னன்
வாழிமறை வாழிசைவம்.

உ

# அவையடக்கம்.

வள்ளலருணேசர் மருவுமுண்ணாமுலைத்தாய்
பிள்ளைத்தமிழொன்று பேசினேன்—வெள்ளை
மதியுடையேன்குற்ற மனம்பொறுப்பீர்கல்வி
நிதியுடையீரன்பு நிகழ்ந்து.